**ஹம்பந்தோட்டை பிரதேச சபை – 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது வீதி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,709,200 தொகைக்கான மூலதனச் செலவுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மின்சார துணைக் கருவிகள் பொருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 38,278 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 3,648,318 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் மாதம் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த இந்த நிர்மாண வேலைகள் தேர்தல் முடியும் வரை செயற்படுத்தக்கூடாது என சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சாக்கடை பவுஸர் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 385,280 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் திகதியில் உள்ளாறு பெற வேண்டிய | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி | பெற வேண்டிய வருமானம் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 342,643 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்படும். | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாமையால் மீளளிப்பு செய்யப்படாத வீதி விளக்கு பாராமரிப்புக் கட்டணம் ரூபா 403,416 தொகை பெறவேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மின்சார சபையிலிருந்து வேண்டப்பட்ட காரணத்தினால் பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டது என. | பெற வேண்டிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சபையினால் மிகையாக அறவீடு செய்யப்பட்ட ரூபா 49,953 தொகைக்கான சந்தை வாடகைத் தவணைப் பணம் செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டின் போது கொடவாய மீன்பிடித் துறைமுகம் ஒளியேற்றுவதற்காக பெற வேண்டிய ரூபா 124,325 தொகை மீளாய்வாண்டிற்காக மூலதன வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | பெறவேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 21,287,171 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | முன்னர் இருந்து காணப்படும் இந்த மீதிகளுக்காக அட்டவணைகள் வழங்குவதற்கு தகவல்கள் இன்மை என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் பிரிவு 218 | ஆண்டிற்கு ஒருமுறை சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்காண்பதற்காக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் | 2022 ஆண்டில் நிலையான சொத்துக்கள் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதென வும், எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை | விதியின் பிரகாரம் செயற்பட்டு அறிக்கை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் எனவும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 2010 – 2012 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த தரப் பரிசோதனைக் கட்டண முற்பணம் ரூபா 209,457 தொகை தொடர்பாக பிரமாணங்களின் படி செயற்பட்டிருக்காததுடன், நிலுவை மீதியில் இனங் காணப்படாத மீதி ரூபா 146,207 தொகை காணப்பட்டது. | ரூபா 146,206 இனங்காணப்படாத மீதிக்கான தகவல்கள் காணப்படவில்லை என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2019 ஜூன் 21 திகதிய 05/2019 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி “ஆ” | இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களிடம் பெற வேண்டிய ரூபா 223,530 இற்கான கடன் மீதி தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 584,183 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 44,442,002 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,179,120 | 4,280,694 | 4,954,562 | 1,276,160 | 785,670 | 754,164 | 610,230 | 1,950,028 |
| வாடகை | 16,185,136 | 18,624,506 | 18,758,015 | 12,498 | 19,797,540 | 16,947,780 | 14,063,194 | 149,007 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 10,957,042 | 2,028,652 | 2,633,482 | 242,200 | 9,907,862 | 1,728,121 | 1,594,971 | 847,030 |
| ஏனைய வருமானங்கள் | 5,353,800 | 5,087,457 | 4,329,770 | 798,287 | 66,765,140 | 5,137,205 | 5,032,205 | 40,600 |
| மொத்தம் | 36,675,098 | 30,021,309 | 30,675,829 | 2,329,145 | 97,256,212 | 24,567,270 | 21,300,600 | 2,983,665 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய வீதவரி ரூபா 868,076 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) இற்கு இணங்க சபையின் அதிகார பிரதேசத்தில் இனங்காணக்கூடிய முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை கால ரீதியாக இனங்காணாமல் 2010 / 2011 ஆண்டுகளின் போது இனங் காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இன் படி வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2011 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் படி வீதவரி அறவீடு செய்யப்பட்டுள்ளது. | புதிய வீதவரி பெறுமான மதிப்பீடு செய்வதற்காக பெறுமான மதிப்பீட்டுத் திணைக்களத்தை வேண்டப்பட்டுள்ளது என. | கட்டளைச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக 39 வர்த்தக அலகுகளில் இருந்து பெற வேணடிய வியாபார வரி மற்றும் 17 கைத்தொழில் அலகுகள் இருந்து பெற வேண்டிய கைத்தொழில் வரி முறையே ரூபா 64,800 தொகை மற்றும் ரூபா 14,250 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 21,450 தொகையினை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், மீது நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 25 வர்த்தக அலகுகளில் இருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 25,000 இற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 152(1) இற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,000 தொகையினை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | தத்துரூபமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 13 நிறுவனங்களில் இருந்து ரூபா 217,200 இற்கான விளம்பர | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (எ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியுள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,800,143 தொகை மற்றும் ரூபா 2,730,670 தொகையாக இருந்தது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மெல்லகஸ்வெவயில் அமைந்துள்ள கடையறைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2018 ஜனவரி 26 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி மாதாந்த கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மே 18 திகதிய சபைத் தீர்மானத்தின் படி அந்தக் கடையறைகளுக்காக குறைந்த வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தமையால் 2018 ஜூலை மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை சபை இழந்துள்ள வருமானம் ரூபா 776,800 தொகையாகும். | சபையினால் தீர்மானிக்கப்பட்ட கடை வாடகை அறவிடப்பட்டதெனவும் 2022 திசெம்பர் 28 திகதி இந்த 12 கடையறைகளும் ஹம்பாந்தோட்டை மாநகர சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையிண்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 10 திகதிய பீ/01/01 இலக்கம் கொண்ட கடிதத்தின் 06 ஆம் பந்திக்கு இணங்க புதிய வீதி விளக்குகள் பொருத்தும் போது மின்சார சபையிலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 2192 வீதி விளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றிருக்காமையால் வீதி விளக்குகள் பாராமரிப்பு மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,108,125 தொகை மீளளிப்புச் செய்யப்பட முடியாத செலவொன்றாக இருந்தது. | மின்சார சபையிடம் விண்ணப்பிக்கப்பட்ட போதிலும், அங்கீகாரம் கிடைக்காமையால் பராமரிப்புத் தொகை மீளளிப்புச் செய்துகொள்ள முடியாமல் போனது என. | வீதி விளக்கு பராமரிப்பு செலவு மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் அனுபவிக்கப்படும் 53 காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் நீர் பவுஸரின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக்கொள்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் மயானங்களின் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மற்றும் நீர் பவுஸர் உரித்தாக்குவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டின் போது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 8,483,140 இற்கான செலவொன்று மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த உலர்வலய தாவரவியல் பூங்காவிற்கு அண்மையிலுள்ள வாகன தரிப்பிடத்திலிருந்து மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 26,100 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தாவரவியல் பூங்காவினுள் வாகனங்கள் நிறுத்துவதற்காக மோட்டார் வாகன வளவு ஒன்று தரிப்பிடமொன்று காணப்பட்டதெனவும், இந்த வாகன தரிப்பிடத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருக்காமையால் வாகனங்கள் வருவதில்லை எனவும். | தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கி எதிர்பார்த்த குறிக்கோளை நெருங்குவதற்கு செயற்பட வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிறுவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2021 செப்தம்பர் 09 திகதி ரூபா 7,902,800 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த மயுரபுர வாராந்த சந்தை வாகன தரிப்பிடம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை 2021 திசெம்பர் 07 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் படி, அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 540,484 தொகையினை அறவீடு செய்யாமல் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூபா 2,785,999 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலையை கைவிட்டுச் சென்றிருந்த போதிலும், | தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டு 2023 ஜனவரி 03 திகதி இரு தரப்பினரினதும் இணக்கத்துடன் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதுடன், செயற்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பில் நிறைவேற்றப்பட்ட வேலையின் அளவிற்கு மாத்திரம் பகுதி கொடுப்பனவு பில் பத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதென. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட்டு தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதுடன், பூர்த்தி செய்யப்படாத நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தரினால் ரூபா 2,785,999 இற்கான பகுதிக் கொடுப்பனவுக்கான பில் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியின் 07 பதவிகள் தொடர்பான 23 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் மட்ட பதவிகளில் மிகை ஒன்று புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு காரணமாக ஏற்பட்டவையாகும் என. | பதவியணியின் மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |